**செய்தி வெளியீட்டு எண்.948** **நாள்: 8.12.2009**

# பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பில் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெற்ற ஆதிதிராவிடர் / பழங்குடியினர் பிரிவுகளை சேர்ந்த மாணவர்களுக்கு **மாண்புமிகு துணை முதல்வர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள்** பரிசு தொகை வழங்கினார்கள்

மாநில அளவில் அதிக மதிப்பெண்கள்:-

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாகக் கொண்டு படித்து, அரசுத் தேர்வுகள் இயக்ககம் நடத்தும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் அதிக மதிப்பெண்கள் பெற்று முதன்மை படைக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினத்தவர் மற்றும் மதம் மாறிய கிருத்துவ ஆதிதிராவிடர் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவ/மாணவிகளுக்கு தனித்தனியே பரிசுகளும் பாராட்டுகளும் வழங்கி ஊக்கப்படுத்தும் திட்டம் நடைமுறையில் இருந்து வருகிறது.

இத்திட்டப்படி 12ஆம் வகுப்பில் மாநில அளவில் முதலிடம் பெறும் மாணவ/மாணவிகளுக்கு வழங்கப்பட்ட ரொக்கப்பரிசுத்தொகை ரூ.3000–/ என்பதை ரூ.10,000/ஆகவும், 12ம் வகுப்பில் மாநில அளவில் முதலிடம் பெறும் மாணவ/மாணவிகளுக்கு வழங்கப்பட்ட ரொக்கப் பரிசுத் தொகை ரூ.5000/– என்பதை ரூ.25,000/ ஆகவும் 1998 ஆம் ஆண்டில் மாண்புமிகு **முதலமைச்சர் டாக்டர் கலைஞர்** அவர்களால் உயர்த்தி வழங்கப்பட்டது. அதன்படி கடந்த 2009 மார்ச் திங்களில் நடைபெற்ற 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதலிடம் பெற்ற மாணவ/மாணவியர்கள் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களை இன்று (08.12.2009) தலைமைச் செயலகத்தில் சந்தித்தனர். அப்போது அவர் அம்மாணவ/ மாணவிகளுக்கு ரொக்கப் பரிசுகளையும், பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கி வாழ்த்துகள் கூறி மகிழ்ந்தார்.

இந்நிகழ்வில் 10ம் வகுப்பில் திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை, சாராடக்கர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி **பா. ரேவதி**, (493/500) மதிப்பெண்கள் பெற்று ஆதிதிராவிடர் பிரிவை சேர்ந்த மாணவிகளில் மாநில முதன்மை பெற்றுள்ளார். தென்காசி, பாளையங்கோட்டை ஃபேரன் பிரக் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர் **சு. கார்த்திக்குமார்** 490/500 மதிப்பெண்கள் பெற்று ஆதிதிராவிடர் பிரிவைச் சேர்ந்த மாணவர்களில் மாநில அளவில் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

பொன்மலைப்பட்டி, திருச்சி மாவட்டம் செயின்ட் ஜோசப் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி **இரா. தாரணி** 487/500 மதிப்பெண்கள் பெற்று பழங்குடியினர் பிரிவு மாணவிகளில் மாநிலத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம். கார்மல் மேல்நிலைப்பள்ளி **ஜி, ஜிஷாந்த்** என்கிற மாணவர் 483/500 மதிப்பெண்கள் பெற்று பழங்குடியின பிரிவு மாணவர்களில் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுள்ளார்.

பல்லாவரம் சென்னை–43 செயின்ட் தெராசஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி **ஜா. ஞானதீப பிரியதர்ஷினி**, 488/500 மதிப்பெண்கள் பெற்று மதம் மாறிய கிருத்துவர் பிரிவு மாணவிகளில் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுள்ளனர். திண்டிவனம், விழுப்புரம் மாவட்டம் செயின்ட் ஆன்ஸ். மேல்நிலைப்பள்ளி மாணவர் **ஜெ. ஜோயல் பிரபு** 486/500 மதிப்பெண்கள் பெற்று மதம் மாறிய கிருத்துவர் பிரிவு மாணவர்களில் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றுள்ளார். இவர்களுக்கு ரூ.10,000/ பரிசுத் தொகையையும், பாராட்டுச் சான்றிதழையும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் வழங்கினார்.

அதே போன்று 12ம் வகுப்புத் தேர்வில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை ஸ்ரீ வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர் **ந. கபிலன்** 1177/1200 மதிப்பெண்கள் பெற்று ஆதிதிராவிடர் பிரிவைச் சேர்ந்த மாணவர்களில் மாநில அளவில் முதலிடத்தையும், நாமக்கல் மாவட்டம் வெற்றி விகாஸ் மேல்நிலைப்பள்ளி மாணவி **இரா. அபிராமி** 1171/1200 மதிப்பெண்கள் பெற்று மாணவிகளில் மாநிலத்தில் முதலிடத்தையும் ஈரோடு மாவட்டம் பாரதி வித்யா பவன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர் **பா. சுஜித்** 1143/1200 மதிப்பெண்கள் பெற்று பழங்குடியினர் பிரிவைச் சேர்ந்த மாணவிகளில் மாநிலத்தில் முதலிடத்தையும், காஞ்சிபுரம் மாவட்டம் புழுதிவாக்கம், வியாச வித்யா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி **இரா.சரண்யா** 1126/1200 மதிப்பெண்கள் பெற்று பழங்குடியினர் பிரிவு மாணவிகளில் மாநிலத்தில் முதலிடத்தையும், பிரம்மபுரம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம் கிறிஸ்டி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவி **இஸ். நிவ்யா பிரேம்குமாரி**, 1160/1200 மதிப்பெண்கள் பெற்று மதம் மாறிய கிருத்துவர் பிரிவைச் சேர்ந்த மாணவிகளில் மாநிலத்திலேயே முதலிடத்தையும், தேனி மாவட்டம் இராயப்பன்பட்டி எஸ்.யு.எம் மேல்நிலைப்பள்ளி மாணவர் **த. வீரமணி** 1113/1200 மதிப்பெண்கள் பெற்று மதம் மாறிய கிருத்துவர் பிரிவைச் சேர்ந்த மாணவர்களில் மாநிலத்தில் முதலிடத்தையும் பெற்றுள்ளனர். இவர்களுக்கு ரூ.25,000/ வீதம் பரிசுத் தொகையையும் பாராட்டு சான்றிதழையும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

<u>சிறந்த எழுத்தாளர்களுக்கு ரொக்கப்பரிசு</u>:-

மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்காக, ஆதிதிராவிடர்/பழங்குடியினர்/ கிருத்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிடர் அல்லாத சிறந்த எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்காக, எழுத்தாற்றல் மிக்க 11 படைப்பாளிகளுக்கு ஒவ்வொரு சிறந்த நூலுக்கும் ரூ.20,000/ வீதம் நிதி உதவி மற்றும் பாராட்டு சான்றினையும் மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் வழங்கினார்கள். இதில் திரு. எஸ். ராமகுரு, திருமதி. நா. சுப்புலட்சுமி உள்ளிட்ட 11 படைப்பாளிகள் பயனடைந்தனர்.

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் மூலம் நிலம் வாங்கும் திட்டம், தனி நபர் கடன் திட்டம், மகளிர் சுயஉதவிக்குழு சுழல் நிதி வழங்கும் திட்டம் மற்றும் இந்தியக்குடிமைப்பணி முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற நபர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம் போன்ற நலத்திட்டங்களுக்கு 5.21 கோடி செலவில் 2631 பயனாளிகளுக்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்கள் குடிமைப்பணி தேர்வு எழுதும் ஆதிதிராவிடர் இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ஒரு நபருக்கு ரூ.25,000/– வீதம் புத்தகங்கள் வாங்குவதற்கெனவும், இடைநிகழ் செலவுகளுக்கெனவும் 24 நபர்களுக்கு மொத்தம் 6.00 இலட்சம் நிதியுதவி வழங்கினார்.

இந்த பரிசுகளையும், பாராட்டுச் சான்றிதழ்களையும் நலத்திட்ட நிதியுதவிகளையும் மாண்புமிகு தமிழக துணை முதல்வர் அவர்களிடமிருந்து நேரில் பெறுவதற்கு வாய்ப்பு கிடைத்ததை எண்ணி மாணவ/ மாணவியர்கள், அவர்களது பெற்றோர்கள் மற்றும் நலத்திட்ட நிதி உதவிகளை பெற்ற பயனாளிகள் யாவரும் மிகுந்த உவகையும், பெருமிதமும் அடைந்ததுடன் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கு தங்களுடைய நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் பொழுது ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. ஆ. தமிழரசி, செயலாளர் திரு. விஸ்வநாத் ஷெகாவ்கர், இ.ஆ.ப. ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு. பொ. சிவசங்கரன், இ.ஆ.ப., தாட்கோ நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் திரு. சந்திரகாந்த் பி காம்ப்ளே, இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு. உ. இரவீந்திரன், இ.வ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.